பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 20 சனிக்கிழமை 03.02.2024 கதிர் 88

# தரமற்ற மருந்து கொள்வனவு அமைச்சர் கெஹலிய கைது

## 10 மணி நேர வாக்குமூலத்தின் பின்னர்



தரமற்ற மருந்துகளை கொள்வனவு செய்தமை தொடர்பாக முன்னாள் சுகாதார அமைச்சரும் இந்நாள் சுற்றாடல்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல கைது செய்யப்பட்டுள்ளார்.

மாளிகாகந்த நீதிவான் லோச்சனா அபேவிக்ரமவின் ☞2



## இது ரகசியம் அல்ல!

தமிழ் நாட்டில் நடிகர் விஜய் அரசியலுக்குவரப்போகிறார்என்பதை உறுதிப்படுத்தி அறிவித்துள்ளார். கடந்த பல மாதங்களாகவே அவர் அரசியலுக்கு வரப்போகிறார் என்று தீவிரமாகக் கதைகள் அடிபட்டு வந்தன. நேற்று ஓர் அறிக்கை மூலம் அதனை அவர் மக்களுக்கு அறிவித்துள்ளார். ஒருநடிகரான அவர் அரசியலுக்கு வரலாமா இல்லையா என்பது தொடர்பில் கடுமையான வாதப்பிரதிவாதங்கள்விமர்சனங்கள் இருந்தாலும் தனது அரசியல் நுழைவு உறுதியானது என்பதை அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

தனது கட்சிக்கு தமிழக வெற்றிக் கழகம் என்றுபெயரிட்டுள்ளார். தான் ஏற்கனவேஒப்பந்தம்செய்துகொண்ட இரு திரைப்படங்களில் நடித்து முடித்ததும் திரைப்படத் ☞2

## இராணுவ தளபதிக்கு ஜனாதிபதி கௌரவம்

இராணுவ பரசூட் வீரராக தனது திறமையை வெளிக்காட்டிய இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் பாராட்டி, கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை இராணுவத்தின் பரசூட் சாகச வரலாற்றைப் புதுப்பிக்கும் வகையில் குடாஓயா கொமாண்டோ ரெஜிமண்ட் பயிற்சி பாடசாலையில் கடந்த 22ஆம் திகதி இராணுவத்தளபதி பரசூட் சாகசம் செய்தார். ☞8

## சுகாதாரத் தொழிற்சங்கங்களின் போராட்டம் புதன்வரை நிறுத்தம்

72 சுகாதார தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள தொழிற்சங்க நடவடிக்கை நேற்றுடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது

வைத்தியர்களுக்கு வழங்கப்படும் 35,000 ரூபா கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரி சுகாதார தொழிற்சங்கங்கள் இந்த பணிப்பகிஷ்கரிப்பில் பங்கேற்றிருந்தன.

பொது சுகாதார பரிசோதகர்கள், இரசாயன ஆய்வுக்கூட நிபுணர்கள், பற்சிகிச்சை நிபுணர்கள், மருந்தாளர்கள் , குடும்ப சுகாதார ஊழியர்கள், பொது சுகாதார ஆய்வக தொழில்நுட்பநிபுணர்கள் மற்றும்பல்தொழில்நுட்ப வல்லுநர்கள் உள்ளிட்ட 72 தொழிற்சங்கங்கள் இந்தபணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்தன.

தொழிற்சங்க நடவடிக்கையின் காரணமாக ☞2

## நிகழ்நிலை காப்புச் சட்டத்தை உடன் திருத்த ஐ.நா. மனித உரிமை ஆணையர் வலியுறுத்து

இலங்கையின்நிகழ்நிலைகாப்புச்சட்டம்மனித உரிமைகள் விடயத்தில் எதிர்மறையானதாக்கங்களை ஏற்படுத்தும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இந்தச் சட்டத்தினால் ஏற்படும் பாதிப்புக்களை மீளாய்வு செய்துசட்டத்தைதிருத்தம் செய்யுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கைஆளும் தரப்பிடம்வலியுறுத்தியுள்ளது.

ஐக்கியநாடுகள்மனித உரிமைகள்ஆணையாளரின் அலுவலகம் தனதுஉத்தியோகப்பூர்வ எக்ஸ் வலைத்தளத்தில் மேற்கண்டவாறு ☞10

## மாணவர்களுக்கு ஒருவேளைகூட உணவு வழங்கமுடியாத அவலம்

### ஆளும் தரப்பை சாடுகிறார் சஜித் பிரேமதாஸ

நாடு வங்குரோத்து அடைந்துள்ளது. கடனை மீளச் செலுத்த முடியவில்லை. பாடசாலை மாணவர்களுக்கு ஒருவேளை உணவையேனும் வழங்க முடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அம்பலாங்கொடையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போது உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

மனிதர்களுக்கான ஈமோகுளோபினில் மட்டுமல்ல பிரப்பபோல் உள்ளிட்ட சில ☞2

## உறுமய தேசிய செயற்பாட்டு செயலகம் திறந்து வைப்பு

### காணி உரிமையை உறுதிப்படுத்தும் இந்த அலுவலகம்

உறுமய தேசிய செயற்பாட்டு செயலகம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் செத்தம் வீதியில் உள்ள பழைய ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் கட்டிடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக்கருவிற்கமைய 20 இலட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு முழு உரிமையுடைய காணி உறுதிப்பத்திரங்களை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

உறுமய வேலைத் திட்டத்தைநடைமுறைப்படுத்துவதற்காகஇவ்வருட வரவுசெலவுத்திட்டத்தில் இரண்டு பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ்வழங்கப்பட்ட காணி அனுமதிப்பத்திரங்கள் அனைத்தும் காணி உறுதிப் பத்திரங்களாக மாற்றப்பட்டு அவற்றை பயன்டுத்திய விவசாயிகளுக்குவழங்கப்படும்.

மக்கள்முன்வைக்கும் பிரச்சினைகளுக்கு உடனடித் ☞2

## பொருளாதாரம் ஸ்திரமாவதால் வறுமையை ஒழிப்பதில் கவனம்

### சாகல ரத்னாயக்கா தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமான நிலைக்குத் திரும்பிபுகின்றது, மக்களின் வறுமையை ஒழிப்பதில் விசேட கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

என்று தேசிய பாதுகாப்புதொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு ரமதா ஹோட்டலில்பாடசாலை மாணவர்களின் மதிய உணவு வேலைக்கான ஊட்டச்சத்து அரிசி வழங்கும்நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

போரினால் பாதிக்கப்பட்டவர்களைக் கருத்தில் கொண்டு வடக்கு,கிழக்கின்4மாவட்டங்களை உள்ளடக்கி தொடங்கப்பட்ட இந்த வேலைத்திட்டம் 2004ஆம் ஆண்டு ஆழிப்பேரலை(சுனாமி) தாக்கத்தின் பின்னர் 6 மாவட்டங்களுக்கு விரிவாக்கப்பட்டது. ☞10

## ஜனாதிபதி வேட்பாளர் குறித்து ரணிலுடன் பேச பெரமுன முடிவு

ஜனாதிபதித் தேர்தல்வேட்பாளர்தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவுடன் தனியாகப் பேசுவது என்று பொது ஜன பெரமுன தீர்மானித்துள்ளது. இதுதொடர்பில் தமது கட்சியுடன் பிரத்தியேகமாகக் கலந்துரையாடி இறுதியான தீர்மானத்தினை எடுக்குமாறு அந்தக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதிசெயலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் பொது ஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தி மஹிந்த அமரவீர, நிமல்சிறிபால டிசில்வா, பிரதமர் தினேஷ் ☞2

## ஆயுர்வேதக் கூட்டுத்தாபனம் ரூ. 195 மில். இலாபம் ஈட்டல்

ஆயுர்வேதக் கூட்டுத்தாபனம் 2023 இல் 195 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளதாக சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்சிசிரஜயகொடி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

76 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பத்து இலட்சம் மூலிகைச் செடிகளை நடும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டத்தின் முதல் கட்டம் ஆரம்பமானது. இதன்படி ஏப்ரல் 7ஆம் திகதி வரை இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதனை சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சு, ஆயுர்வேதக் திணைக்களம் மற்றும் பொது நிர்வாக அமைச்சு ஆகியன இணைந்து ஆரம்பித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் மையப்படுத்தி இந்த தேசிய வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நமது நாட்டில் மூலிகைகள் ஏராளமாக உள்ளன. ஆனால்நீண்ட காலமாக சுதேச வைத்தியத்திற்கு அவசியமான மூலிகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. எனவே, வர்த்தக அடிப்படையில் சுதேச மூலிகைச் செடிகளை நட நடவடிக்கை எடுக்கப்பட்டது. குறிப்பாக மருந்து உற்பத்திக்கான இறக்குமதி மூலப்பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளது. ☞8

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மீதான விசாரணை நிறைவு

நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பு சமர்ப்பித்துள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு எதிராகத்தாக்கல்செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணைநிறைவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, விஜித் மலல்கொட, ஏ.எச்.எம்.டி நவாஸ், ஷிரான் குணரத்ன, அர்ஜுன அபேசேகர ஆகிய ஐவர் அடங்கிய நீதியசர்கள் குழாம் முன்னிலையில் ஆறு நாட்கள் மனுக்கள் தொடர்பிலான விசாரணை நடைபெற்றது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகருக்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக நீதிபதிகள் குழாம், விசாரணை நிறைவில் அறிவித்தனர். பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் சில சரத்துகள் அரசமைப்பிற்கு முரணானவை தீர்ப்பு வழங்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் 31 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

துறையில் இருந்து ஒதுங்கி முழு நேர அரசியலில் ஈடுபடப் போகிறார் என்பதையும் அவர் அறிவித்துள்ளார். விஜய் அரசியலுக்கு வருவார் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான் என்றாலும் அவரது நேற்றைய அறிவிப்பு அவரது ரசிகர்களுக்குப் புதிய உற்சாகத்தைத் தந்துள்ளது.

நீண்ட காலத்துக்கு முன்னரே விஜய் தான் அரசியலுக்கு வருவார் என்பதைப் பல நேர்காணல்களில் தெளிவாகச் சொல்லியிருப்பார். அது தொடர்பில் பொருத்தமான நேரத்தில் பொருத்தமான முடிவுகளை எடுப்பார் என்றும் கூறியிருக்கிறார். தன்னை இந்தளவு உச்சத்தில் தூக்கி வைத்த தமிழ்நாட்டு மக்களுக்குத் தான் செய்யும் பிரதியுபகாரம் இது என்று தனது அரசியல் நுழைவை அவர் கருதுகின்றார்.

ரஜனிக்காந்த் போன்றில்லாமல் விஜய் அரசியலுக்குள் நுழைவது என்று எடுத்துள்ள முடிவு தமிழ் நாட்டின் அரசியல் களத்திற்குப் பொருத்தமான ஒன்றுதான். கருணாநிதி, ஜெயலலிதா என்று இருபெரும் ஆளுமைகள் அரசியல் களத்தில் இருந்து ஒரே கால கட்டத்தில் மறைந்த நிலையில் அந்தத் தலைமை வெற்றிடத்தை நிரப்புவதற்கான போட்டிக் களத்திலேயே தமிழ்நாடு இப்போது இருக்கின்றது.

கருணாநிதிக்குப் பின்னர் திமுகவிற்கு ஸ்டாலின் தலைமை ஏற்றாலும் அவர் பதவிக்கு வந்தது மிகவும் வயதான காலத்திலேயே என்பதால் விரைவிலேயே அந்தக் கட்சி இன்னொரு தலைமையை உருவாக்கவேண்டிய நிலையில் இருக்கிறது. அதுவும் இன்னும் ஒரு 10 ஆண்டுகளுக்குள் புதிய தலைவர் அந்தக் கட்சிக்குத் தேவை. ஸ்டாலினின் மகன் உதயநிதியை அந்த இடத்திற்குக் கொண்டுவருவதற்கான அவசரமும் மும்முரமும் களத்தில் பிரதிபலிக்கின்றது.

அதேநேரம் அதிமுகவுக்குள் ஜெயலலிதாவுக்குப் பின்னர் அடுத்த தலைவர் யார் என்பதற்கான போட்டிக்கு இன்னும் தேடல் தொடர்கின்றது. எடப்பாடியார் தன்னை அடுத்த தலைவராக நிலைநிறுத்த இன்னும் போராடிக் கொண்டே இருக்கிறார். அவரது ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட குற்றங்குறைகளில் இருந்து மீண்டு வந்து தன்னைத் தலைவராக நிலைநிறுத்துவதற்கே அவருக்கு நீண்ட கால அவகாசம் தேவையாக இருக்கின்றது.

இந்த நிலையில் எதிர்காலத் தமிழ்நாட்டுத் தலைவருக்கான போட்டிக்களம் திறந்தே கிடக்கின்றது. அடுத்த 10 ஆண்டுகளில் அதை இலக்கு வைத்து விஜய் தனது அரசியல் நுழைவை அறிவித்திருக்கிறார். தனது பயணம் நிதானமாகவே இருக்கும் என்பதையும் அவர் உணர்த்தி இருக்கின்றார். 2026 தேர்தலில்தான் தனது கட்சி தேர்தலில் போட்டியிடும் என்றும் அறிவித்திருக்கிறார். அவரிடம் தனது அரசியல் பயணத்துக்கான ஒரு வழி வரைபடம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

சினிமா புகழ் அரசியல் வாழ்க்கைக்கு எந்தளவுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்கிற கேள்வி இருக்கின்றது. கருணாநிதி, எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவுக்குப் பின்னர் சினிமா புகழ் அரசியலில் செலுத்திய செல்வாக்கு மிகக் குறைவானது என்பது கண்கூடு. விஜயகாந்த் மட்டுமே அதில் கொஞ்சம் வெற்றி பெற்றார். ஆனால் குறுகிய காலத்திலேயே அவர் காணாமற்போனார். அவருக்குப் பின்னர் வந்த சீமானாலோ கமல்ஹாசனாலோ இதுவரை பெரிதாக எதுவும் சாதிக்க முடியவில்லை என்பதே நிதர்சனம். எனவே இன்றைய கால கட்டத்தில் அரசியலில் வெற்றிபெற சினிமா புகழ் மட்டுமே போதுமானது அல்ல என்பது தெளிவு.

இந்தப் பயணத்தில் விஜய் அரசியலை எப்படி அணுகப் போகிறார், களத்தில் எப்படி காய் நகர்த்தப் போகிறார் என்பதைப் பொறுத்தே அவரது வெற்றி அமையும். அவரது அரசியல் நுழைவு மிகப் பொருத்தமான காலத்தில் நிகழ்ந்திருந்தாலும் அரசியலுக்குத் தான் பொருத்தமானவர்தானா என்பதையும் அவர் விரைவில் நிரூபித்தாகவேண்டும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தரமற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவுக்கு அமைவாக நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்குவதற்காக பிரசன்னமாகிய தருணத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் அவரிடத்தில் சுமார் 10 மணிநேரம் வாக்கு மூலம் பதிவு செய்ததன் பின்னர் கைது செய்துள்ளனர்.

அவருக்கான வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்ட நிலையில் சர்ச்சைக்குரிய ஹியுமன் ஈமோகுளோபின் மருந்து கொடுக்கல் வாங்கல் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக பிரசன்னமாகியிருந்தார்.

அவரிடத்தில் பல்வேறு வினாக்களைத் தொடுத்திருந்த அதிகாரிகள் ஈற்றில் கைது செய்யும் தீர்மானத்துக்கு வருகை தந்திருந்தனர்.

### எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

இதேவேளை, அமைச்சர் கெஹலியவைக் கைதுசெய்யுமாறு வலியுறுத்தி குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு முன்பாக நேற்றுக் காலை முதல் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் குழுமியிருந்ததுடன், அவர்கள் சாத்வீக முறையில் எதிர்ப்பிலும் ஈடுபட்டனர்.

இதன்போது போராட்டத்தில் பங்கேற்றவர்கள், இன்றும் (நேற்று) கூட கெஹலிய ரம்புக்வெல திணைக்களத்தின் பின்கதவால் தான் வாக்குமூலம் அளிப்பதற்கு வருகை தந்துள்ளார். அவரை சுதந்திரமாக வெளியேறுவதற்கு அனுமதிக்காதீர்கள்.

மருந்திலும் திருட்டுக்களில் ஈடுபட்டவரை உடன் கைது செய்யுங்கள். இனினும் நாம் ஏமாறுவதற்கு தயாராகவில்லை. கைது செயற்பட வேண்டும். மோசடியாளர்கள் மீது விசாரணை வேண்டும் என்று வலியுத்திப் போராடினார்கள். இதன்போது, கலகமடக்கும் பொலிஸாரு, விசேட அதிரடிப்படையினரும் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

தரமற்ற ஈஈமாகுலோபுலின் மருந்துகளை கொள்வனவு செய்து மருத்துவ விநியோகப் பிரிவுக்கு வழங்கிய சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தபோது, சுமார் 130 மில்லியன் ரூபா நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது..

## உறுமய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வுகளை வழங்கு வதற்கும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் வழிநடத்தல் பொறிமுறையை செயற்படுத்துவதற்காக ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் 'உறுமய ' தேசிய செயற்பாட்டு செயலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மானியப்பத்திரங்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், பதிவு செய்வதற்கும் உறுமய தேசிய செயற்பாட்டுச் செயலக அலுவலகத்தை 0114354600-1 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் மூலமோ அல்லது http://tinyurl.com/yb98y-hey என்ற இலத்திரனியல் படிவத்தின் ஊடாகவோ தொடர்பு கொள்ளலாம்.

## மாணவர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருந்துகளால் பொதுமக்கள் பாதிப்படைந்து உயிரிழந்துள்ளார்கள். தரமற்ற மருந்து இறக்குமதியால் நுவரெலியா மாவட்டத்தில் பலர் கண்களை இழந்துள்ளனர்.

நாடு வங்குரோத்து அடைந்துள்ளது. கடனை மீளச் செலுத்த முடியவில்லை. பாடசாலை மாணவர்களுக்கு ஒருவேளை உணவையேனும் வழங்கமுடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது.

இந்தப்பிரச்சினைகளுக்கு ஆளும் தரப்பால் தீர்வு வழங்கப்படவில்லை. மருந்து கொடுக்கல் வாங்கலிலும் நிதி கொள்ளையிடப்படுமாயின் அது தவறான செயற்பாடு மட்டுமன்றி மனிதாபிமானம் அற்றதுமாகும்.

இவ்வாறான செயற்பாட்டைச் செய்த அமைச்சர் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றார். அத்தகைய ஒரு அமைச்சர் மீது நம்பிக்கை இல்லையென்று கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு எதிராக ஆளும் தரப்பினர் வாக்களிக்கின்றார்கள். ஆகவே, குறித்த அமைச்சரைக் காப்பாற்றுவதற்காக செயற்பட்ட அனைவருமே இந்த விடயத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்றார்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணவர்தன, நிமல் லன்சா, நளின் பெர்ணான்டோ உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இச்சந்திப்பு தொடர்பில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்ததாவது:

நான் உள்ளிட்ட சிலர் ஏனைய சில கட்சிகளின் உறுப்பினர்களுடனும் ஜனாதிபதியுடனும் இடம்பெற்ற சந்திப்பின் போது எமது கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கலந்துரையாடினோம்.

எமது கட்சியின் நிபந்தனைகளுக்கு ஜனாதிபதியின் இணங்குவதைப் பொறுத்து அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றார்.

## சுகாதாரத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் நேற்று பாதிக்கப்பட்டிருந்தன, நோயாளிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். நிலமையைச் சமாளிக்க இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் வைத்தியசாலைகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து சுகாதாரத்துறை அமைச்சர் தரப்பிலிருந்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு மாத கால அவகாசம் கோரப்பட்டுள்

அதேவேளை, தமது பிரச்சினை தொடர்பில் சுகாதார அதிகாரிகளுடன் நேற்று கலந்துரையாடிய போதிலும் சாதகமான பதில் எதுவும் வழங்கப்படவில்லையென சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பின் இணை ஏற்பாட்டாளர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்தார்.

இருப்பினும் போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி எதிர்வரும் புதன்கிழமைவரை ஆளும்தரப்புக்கு காவல அவகாசம் வழங்க இருப்பதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் இணை ஏற்பாட்டாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவத:

எமக்கான நியாமான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி போராட்டத்தினை முன்னெடுத்தோம். இரண்டுநாட்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பை தற்போது முடிவுக்கு கொண்டுவருகின்றோம்.

எதிர்வரும் புதன்கிழமை வரையில் இந்தப் பணிப்புறக் கணிப்பை ஒத்திவைப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

எமது பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டபோது எமது விடயங்கள் சம்பந்தமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பொன்று நடைபொறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தன்படி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாது விட்டால் புதன்கிழமைக்குப் பின்னர் போராடுவோம். அத்துடன். எதிர்வரும செவ்வாய்கிழமை சுகாதார அமைச்சர் மற்றும் நிதியமைச்சின் செயலாளர் உள்ளிட்டவர்களை சசந்திக்கவுள்ளோம். அதன்போது இறுதி முடிவுகளை எடுப்போம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# மக்களின் மௌனத்தை அரசு கீழ்ப்படிதலாக கருதக்கூடாது

## மார்ச் 12 இயக்கம் அறிக்கை

அதிகரித்துவரும் வாழ்க்கை செலவு சமாளிக்க முடியாத பட்டினி போன்றவற்றின் மத்தியில் மக்கள் மௌனமாக துயரத்தை அனுபவிப்பதை ஆட்சியாளர்கள் மௌனம் கீழ்படிதல் எனக் கருதக்கூடாது என மார்ச் 12 இயக்கம்

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் குறித்த தனது நிலைப்பாட்டை முன்வைத்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மார்ச் 12 இயக்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

மார்ச் 12 இயக்கம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் மூலம் அடிப்படை உரிமைக

ளுக்கு மிகவும் ஆபத்தானது என்பதையும் இலங்கையின்அரசமைப்பில்உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஜனநாயகக் கொள்கைளிற்கு ஆபத்தானது என்பதையும் நாங்கள் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

மேலும் தற்போதைய அரசாங்கம் இந்த சட்டமூலத்தைத் முன்னெடுப்பதில் காண்பிக்கும் பிடிவாதம் மிகமுக்கியமான பொருளாதாரசீர்திருத்த மற்றும் எதிர்வரும் தேர்தல் காலங்களில் கருத்துவேறுபாடுகளை கொண்டவர்களை மௌனமாக்கும் சிவில் செயற்பாடுகளை ஒடுக்கும் அரசாங்கத்தின் நோக்கத்தைத் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது என்பதை கவலையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்;.

ஜனநாயகவிரோத சட்டத்தை அறிமுகப்படுத்து-வதற்கு அப்பால் நிறைவேற்றுவதற்கு முந்தைய நீதித்துறை ஆய்வு விடயத்திலும் அரசமைப்பு மூலம் உறுதிப்படுத்தப்பட்ட மீறும்வகையில் நாடாளுமன்றம் செயற்பட்டதையும் மே 12 இயக்கம் சுட்டிக்காட்டவிரும்புகின்றது.

இதேவேளை மக்களை மௌனமாக்கு-வதற்காகவும் மக்களையும் கருத்துவேறுபாடுகளைக் கொண்டவர்களைஒடுக்குவதற்காகவும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் இலத்திரனியல் ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம் போன்றவற்றைகொண்டுவருவதற்கு முயல்கின்றது.

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவு சமாளிக்க முடியாத பட்டினி போன்றவற்றின் மத்தியில் மக்கள் மௌனமாக துயரத்தை அனுபவிக்கும் அதேவேளை ஆட்சியாளர்கள் இந்த மௌனம் கீழ்படிதல் எனக் கருதக்கூடாது. அரசாங்கத்தின் வலுக்கட்டாய ஆட்சிக்கு எதிரான பாரிய எதிர்ப்பிற்கு முன்னதான நிலைமையே இது. (05)

# மௌலவிகளுக்கு உளவள ஆலோசனை

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள அரபுக் கல்லூரிகள், மத்ரசாக்களில் கடமையாற்றும் மௌலவிகளுக்கான உளவளத் துணை வழிகாட்டல் செயமர்வொன்று நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க பிரதேச செயலக மண்டபத்தில்இடம்பெற்றகுறித்தசெயலமர்வில் அன்றாட வாழ்க்கையின் போது ஏற்படும் உளநெருக்கீடுகள் மற்றும் அதனை எவ்வாறுதங்களது அன்றாடக் கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பிலும் மாணவர்களுடன் உரையாடும் போதும் கல்வி கற்றல் நடவடிக்கைகளின் செயற்பாடுகளின் போது செயற்படுவது உள்ளிட்ட பல விடயங்கள் இதன் போது விரிவுரைகளாக வழங்கப்பட்டன. குறித்த செயமர்வுக்கு வளவாளராக மாவட்ட உளசமூக உத்தியோகத்தர் எம்.எம்.எம்.சம்சீத் கலந்து கொண்டார்.

இதனை சிறுவர் பாதுகாப்பு மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.

இதில் சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ்.றியால், முஸ்லிம் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.பி.எம்.பஸ்மி உட்பட எனபலர் கலந்து கொண்டனர். (05)



# கொழும்பு கோட்டை பொலிஸ் அதிகாரி காயங்களுடன் வைத்தியசாலையில்

## விசாரணைகள் தீவிரம்

கொழும்பு கோட்டை பொலிஸ் நிலைய நிர்வாகப் பிரிவின் பொறுப்பதிகாரி கீழே வீழ்ந்து காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சந்தேக நபர்களைக் கைது செய்யும் போதே இவர் கீழே வீழ்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்த உப பொலிஸ் பரிசோதகர் சிகிச்சைக்காக நாரஹேன்பிட்டி பொலிஸ் வைத்தியசாலையில்

சம்பவம் தொடர்பில் கோட்டை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (05)

# போதைப்பொருள்களுடன் ரண் பெட்டா கைதானார்

வெளிநாட்டில் உள்ள 'அம்பலங்கொடை சமன்கொலுவா ' வின் நெருங்கிய சகாவான 'ரண் பெட்டா' சட்டவிரோத போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் அம்பலங்கொடை பிரதேசத்தை சேர்ந்த 27 வயதுடையவராவார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்ததகவலின்அடிப்படையில்மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் புஸ்ஸ பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடமிருந்து 2 ஹெரோயின், 16 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (05)

# மன்னார் முசலி பிரதேச செயலக அபிவிருத்தி குறித்து ஆராய்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டினை செயல் படுத்தும் நோக்கில் கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று அவர்களின் முக்கிய தேவைப்பாடுகளை கேட்டறிந்து அதனை செயல்படுத்தும் நோக்கில் முசலி பிரதேச செயலக பிரிவில் உள்ள 20 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

பண்டாரவெளி, வேப்பங்குளம், அரிப்பு, அகத்திமுறிப்பு, சிலாபத்துறை, கொண்டச்சி ,முள்ளிக்குளம், மரிச்சுக்கட்டி ஆகிய பகுதிகளில் உள்ள பொது அமைப்புகள் இந்தக் கலந்துரையாடலில்

கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர்கள் காதர் மஸ்தான் தலைமையில் கலந்துரையாடல் இடம் பெற்றது. இந்நிகழ்வுகளில் குறிப்பிட்ட பிரதேச முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (05)

# இடர் முகாமைத்துவ முன்னாயத்த கூட்டம்

(ஹஸ்பர் ஏ.எச்)

மொறவெள பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பனிக்கட்டியா கிராம உத்தியோகத்தர் பிரிவில் எத்தாபந்திய கிராமத்தில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முன்னாயுத்த குழு கூட்டம் நேற்றுமுன்தினம்(வி-யாழக்கிழமை) நடைபெற்றது.

இக்குழு கூட்டத்தில் இயற்கை அனர்த்தம் தொடர்பான குளங்களின் ஊடாக நீரானது மேலதிகமாக விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்பு காணிகளில் சேதம் ஏற்படுவதைத் தடுப்பதற்கான ஆலோசனைகள் பங்கு பற்றிய மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. மேலும்பனிக்கட்டியாவ பிரதேசத்திற்கான கிராம நிர்வாகத் திட்டமும் செய்து முடிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவநிலையத்தின்பிரதிப்பணிப்பாளர் கு.சுகுணதாஸ், கிராம உத்தியோகத்தர் விற்கும் சன்ஜீவ விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஹேமச்சந்துரு, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.எமல்ராஜ், அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் தக்ஷன் சமுத்தி உத்தியோகத்தர் சந்திரசிரி எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் மொறவெள பிரதேச செயலாளர் தலைமையில் திட்ட மேலாண்மை குழு கூட்டம் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) மொறவெள பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கலந்துரையாடலில் மொறவெள உதவி பிரதேச செயலாளர் சத்யப் பிரியா, நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய சம்மேளன பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (05)

# சுற்றறிக்கைக்கு முரணாக மாணவிகளை பாடசாலைக்கு அனுமதித்த முன்னாள் அதிபருக்கு எதிராக குற்றச்சாட்டு

கட்டுகஸ்தோட்டையிலுள்ள மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு போலியான ஆவணங்களை பயன்படுத்தி சுற்றறிக்கைக்கு முரணான வகையில் மாணவிகளை அனுமதித்ததாகக் கூறப்படும் பாடசாலையின் முன்னாள் அதிபருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு ஒருநபர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்காக ஓய்வுபெற்ற சிரேஷ்ட நிர்வாக அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என மத்திய மாகாண கல்விச் செயலாளர் மேனகா தெரிவித்தார். மத்திய மாகாண கல்விச் செயலாளரால்நியமிக்கப்பட்ட ஐவர்குழுசம்பவம் தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்ட அறிக்கையின் அடிப்படையில் முன்னாள் அதிபருக்கு குற்றப்பத்திரிகை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டுகளை அவர் மறுத்ததால், இது குறித்து முறையான விசாரணை நடத்தவும் ஒரு நபர் நீதிமன்றால்; நியமிக்கப்பட்டார்.

கட்டுகஸ்தோட்டையில் உள்ள குறித்த பாடசாலையில் போலி ஆவணங்களை பயன்படுத்தி மாணவிகளை அனுமதித்தமை தொடர்பில் தற்போது நீதிமன்றில் வழக்கு விசாரணை உள்ளது.

விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட மத்திய மாகாண கல்வி அமைச்சு குறித்த அதிபரை மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கும் பின்னர் கம்பளை பிரதேசக் கல்வி அலுவலகத்துக்கும் இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுத்தது.(05)

# சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் கல்முனையில் புனரமைப்பு

(கே எ ஹமீட்)

கல்முனை பிரதேசத்தில் 16 வட்டாரத்தில் கல்முனை-11,12 ஆம் கிராம சேவகர் பிரிவுகளுக்கான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புணரமைப்பு கூட்டம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய இணைப்பாளரும்,கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயருமான றஹ்மத் மன்சூர் தலைமையில் வியாழக்கிழமை கல்முனையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், கல்முனை முன்னாள் மாநகர சபை உறுப்பினருமான ஏ.சி.சமால்டீன், அரசியல் அதி உயர் பீட உறுப்பினரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான எம்.எஸ்.எம். நிஸார், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினரான ஏ.கே. கலில் றகுமான், சட்டத்தரணி ஷாரிக் காரியப்பர்,

கல்முனை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் ஏ. ஹனிபா, மௌலவி எம்.ஐ.எம். றியாஸ் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து

(05)



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஈரநிலங்கள் காப்போம்

மாசி மாதம் இரண்டாம் நாளான நேற்று உலக ஈரவலய உலக சதுப்பு நில தினம். இந்த நாளில் இலங்கையின் வடக்கு கிழக்கில் உள்ள இரு பெரும் சதுப்பு நிலங்களை அபிவிருத்தி என்கிற பெயரில் நாசமாக்க அதிகாரிகள் திட்டமிடுகிறார்கள் என்கிற எச்சரிக்கை வந்திருக்கின்றது. மன்னாரில் உள்ள விடத்தல் தீவு சதுப்பு நிலக் காடுகளையும் 'ஆடம் பிரிட்ஜ்' எனப்படும் இராமர் பாலத்தை அண்டி பகுதிகளையும் சீரழிப்பதற்குத் திட்டமிடப்படுவதான குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது பசுமைப் பொருளாதாரம் குறித்து அதிகம் பேசும் இன்றைய ஆளும் தரப்பு இந்த விடயங்கள் குறித்து அதிக அக்கறை செலுத்தவேண்டியது அவசியம்.

ஐக்கிய நாடுகள் சபை உலக சதுப்பு நில தினத்தை 'ஈரநிலங்கள் மற்றும் மனித நல்வாழ்வு' என்ற கருப்பொருளுடன் அறிவித்திருந்தது. சதுப்பு நிலம் என்ற பரந்த வரையறைக்குள் நன்னீர் மற்றும் கடல் ஏரிகள், ஆறுகள், நிலத்தடி நீர்நிலைகள், சதுப்பு நிலங்கள், ஈரமான புல்வெளிகள், பீட்லேண்ட்ஸ், சோலைகள், முகத்துவாரங்கள், டெல்டாக்கள், அலை அடுக்குகள், பவளப்பாறைகள் ஆகியவை அடங்கும்.

ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, இந்த நிலங்கள் மக்களுக்கும் இயற்கைக்கும் முக்கியமானவை, தாவர மற்றும் விலங்கு இனங்களில் 40 சதவீதம் ஈரநிலங்களில் வாழ்கின்றன அல்லது இனப்பெருக்கம் செய்கின்றன. ஈரநில பல்லுயிர் பெருக்கம் நமது ஆரோக்கியம், உணவு வழங்கல், சுற்றுலா மற்றும் வேலைகளுக்கு அது முக்கியம். சதுப்பு நிலங்கள் மனிதர்களுக்கும், பிற சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கும் மற்றும் நமது காலநிலைக்கும் இன்றியமையாதவை,

வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் நீர் சுத்திகரிப்பு உள்ளிட்ட நீர் ஒழுங்குமுறை போன்ற அத்தியாவசிய சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளை அவை வழங்குகின்றன. உலகெங்கிலும் உள்ள ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக ஈரநிலங்களை நம்பியுள்ளனர் – இது பூமியில் உள்ள எட்டு பேரில் ஒருவர்.

இந்த ஆண்டின் ஈர நிலங்கள் தொடர்பான ஐ.நாவின் கருப்பொருள் மனித நல்வாழ்வின் அனைத்து அம்சங்களுமான – உடல், மன மற்றும் சுற்றுச்சூழல் – என்பன உலகின் ஈரநிலங்களின் ஆரோக்கியத்துடன் எவ்வாறு பிணைக்கப்பட்டுள்ளன என்பதை எடுத்துக்காட்டுகிறது.

ஈர நிலங்கள் ஏன் ஆபத்தில் உள்ளன என்பதை விளக்கும் ஐ.நா., சதுப்பு நிலங்களின் வீழ்ச்சி, இழப்பு மற்றும் சீரழிவு விகிதம் மிக அதிகமாக இருக்கின்றது என்று கவலை கொள்கின்றது. விரைவான மனித மக்கள்தொகை வளர்ச்சி, நீடிக்க முடியாத உற்பத்தி மற்றும் நுகர்வு, தொழில்நுட்ப வளர்ச்சி, காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்கள் போன்ற காரணங்களால் ஈரநிலங்களின் அழிவு துரிதப்படுத்தப்படுகின்றது.

சதுப்பு நிலங்கள் காடுகளை விட மூன்று மடங்கு வேகமாக மறைந்து வருகின்றன, வெறும் 50 ஆண்டுகளில் – 1970 முதல் – உலகின் 35% ஈரநிலங்கள் இழக்கப்பட்டுள்ளன. மனித நடவடிக்கைகளே இதற்கான முக்கிய காரணம். அபிவிருத்தி என்கிற பெயரில் முதலில் ஆக்கிரமிக்கப்படுபவையாக இந்த ஈரநிலங்களே இருக்கின்றன.

சதுப்பு நில இழப்பு, அச்சுறுத்தப்பட்ட வாழ்வாதாரங்கள் மற்றும் ஆழமடையும் வறுமை ஆகியவற்றின் இந்த தீய சுழற்சியானது, சதுப்பு நிலங்களை தரிசு நிலங்களாக தவறாகப் பார்ப்பதன் விளைவாக ஏற்படுகின்றது என்கிறது ஐ.நா. மாறாக வேலைகள், வருமானங்கள் மற்றும் அத்தியாவசிய சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகள் ஆகியவற்றுக்கு உயிர் கொடுக்கும் அமைப்பு இந்த ஈரநிலங்கள் என்பதை மனிதர்கள் புரிந்துகொள்ளவேண்டும். சதுப்பு நிலங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு ஆளும் தரப்புக்களையும் சமூகங்களையும் ஊக்குவிப்பதும் அவற்றின் மனநிலையை மாற்றுவதும் ஒரு முக்கிய சவாலாகும்.

சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநில தளங்கள். அவை 5 மில்லியன் சதுர கிலோ மீற்றருக்கும் அதிகமான பரப்பளவைக் கொண்டுள்ளன, இது மெக்சிகோவைவிட பெரிய பரப்பளவைக் கொண்டுள்ளது. ஆனால் இவை விரைவாக இழக்கப்பட்டு வருகின்றன.

இதன் பின்னணியை கோடிட்டுக் காட்டி, ஆகஸ்ட் 30, 2021 அன்று, ஐ.நா. பொதுச் சபை, சதுப்பு நிலங்களின் விரைவான இழப்பை மாற்றியமைப்பதற்கான அவசரத் தேவையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவற்றின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பை மேம்படுத்தவும் மாசி மாதம் இரண்டாம் நாளை உலக ஈரநில தினமாக அறிவித்தது. காஸ்பியன் கடலின் கரையில் உள்ள ஈரானிய நகரமான ராம்சரில் 1971 இல் நடைபெற்ற 'சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்கள் மீதான மாநாடு' நடந்த நாளைக் குறித்து இந்தத் தினம் அறிவிக்கப்பட்டது.

பாதுகாக்கப்பட்ட பகுதிகளை அறிவித்தல், பயனுள்ள கொள்கைகளை செயல்படுத்துதல் மற்றும் ஈர நிலங்கள் தொடர்பான அறிவைப் பகிர்தல் ஆகியவற்றின் மூலம் ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கும் அவற்றை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுக்கப்படவேண்டும் என்று இந்த உலக விழிப்புணர்வு நாள் அழைப்பு விடுகின்றது.

கனேடிய கல்வியாளர், அறிவியல் ஒளிபரப்பாளர் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர் டேவிட் சுசுகி கூறுகையில், மனிதர்கள் ஒரு குழந்தை இனம், வெறும் 150,000 ஆண்டுகள் பழமையானது. ஆனால், ஒரு பெரிய மூளையுடன் ஆயுதம் ஏந்திய நாங்கள், உயிர் பிழைத்திருப்பது மட்டுமல்லாமல், பாலைவனங்கள், ஆர்க்டிக் டன்ட்ரா, வெப்பமண்டல மழைக்காடுகள், ஈரநிலங்கள் மற்றும் உயரமான மலைத்தொடர்கள் என மாறுபட்ட வாழ்விடங்களை மாற்றியமைக்கவும் செழிக்கவும் எங்கள் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்தினோம் என்கிறார். அதன் விளைவுகளில் ஒன்றாகவே இன்று ஈரநிலங்கள் ஆபத்தில் சிக்கிக்கொண்டுள்ளன. அவற்றைப் பாதுகாப்பதன் மூலம் இந்த உலகத்தையும் மனிதர்களின் எதிர்காலத்தையும் காப்போம்.



# போரின் போதான பாலியல் தொழில்

## ஓர் பார்வை

கமந்தி விக்கிரமசிங்க

போரின் போது பெண்களின் பாலியல் வேலை வரலாறுகளை ஆராயும் கண்காட்சியைக் காண இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் (ஐசிஈஎஸ் - ICES) மண்டபத்திற்குச் சென்றபோது, ஒரு உடைந்த ஜோடி ரப்பர் செருப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. நைந்து பழசாகிப் போயிருந்த அந்தச் செருப்புகள் ஆர்வத்தைத் தூண்டின. இலங்கை சமூகத்தில் எப்போதாவது பேசப்படும் ஒரு தலைப்பை ஆராயும் கண்காட்சியில் ஒரு ஜோடி என்ன வேலை என்று ஒருவர் ஆச்சரியப்படலாம். ஆனால் அந்தச் செருப்புகளுக்குப் பின்னால் ஒரு கதை இருந்தது. இந்த ஜோடி செருப்புகள் ஒரு பெண் தனது காதலனிடமிருந்து பெற்ற முதல் பரிசு. அந்தப் பரிசு எப்படிக் கிடைத்தது என்பது கண்காட்சியில் மும் மொழிகளிலும் விளக்கப்பட்டிருந்தது.

அந்தச் செருப்புக்குரியவரான பெண் தனது நண்பருடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில், காதலன் அவரைச் செருப்பால் அடித்தார். மட்டுமல்லாமல், இறுதியில் அவரை விட்டுப் சென்றுவிட்டார். அந்த ஜோடி செருப்புகள் ஒரு இனிமையான உறவின் முதல் நினைவாக அந்தப் பெண்ணிடமே தங்கிவிட்டன. இப்போது இந்த பெண் ஒரு பாலியல் தொழிலாளி. ஆனால் அந்தச் செருப்புக்களைத் தந்தவன் அவளுடைய முதல் காதலாகவே இருக்கிறான்.

### பாலியல் தொழிலின் சிக்கல்கள்

நாடு முழுவதிலும் இருந்து 35 பெண்களின் இதுபோன்ற கதைகள் ராதிகா ஹெட்டியாராச்சியால் 'கிராஸ்ரூட்டட் டிரஸ்ட்' என்ற அமைப்பின் முன்னெடுப்பில் ஆவணப்படுத்தப்பட்டது, ஒவ்வொரு கதையும் போரின் போது பாலியல் ஈடுபட்டிருந்த பெண்களின் வலி மிகுந்த வாழ்க்கையைச் சொல்கின்றன. அவர்களினன் பாலியல் வேலையின் சிக்கல்களை அடிக்கோடிட்டுக் காட்டின. பெண்கள் அவர்களின் வாழ்வாதாரத்திற்காக பாலியல் தொழிலில் ஈடுபடுவது அந்த வரலாற்று தருணங்களைத் தாண்டியும் தொடர்கின்றது என்பதைப் பேசுகின்றன.

அவற்றில் சில கதைகள் போரின் போதான பாலி யல் வன்முறைகள் மற்றும் பாலியல் குற்றங்களுக்கான தண்டனையின்மை பற்றிப் பேசுகின்றன. வேறு சில பெண்களைப் பற்றியும் அவர்களின் மன ஆரோக்கியத்தின் மீது போர் செலுத்திய தாக்கம் பேசுகின்றன. மேலும் சில கற்பழிப்பு மற்றும் அதன் விளைவுகள் பற்றியும் அவற்றால் சிறுவயதில் ஏற்படும் அதிர்ச்சி, சில பச்சாதாபம் மற்றும் கருணை பற்றிப் பேசுகின்றன. ஏனையவை இந்தப் பெண்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. அவர்களின் குடும்பங்களின் ஒரே உணவுப்பொருள் உற்பத்தியாளர்களான அவர்கள் பாலியல் வேலை மூலமே பொருளாதார வாய்ப்புகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

யாரும் இதை ஒரு கண்ணியமான வேலையாகக் கருதுவதில்லை. எல்லோரும் இதை அநாகரீகமா கக் கருதுகிறார்கள். எனது முக்கிய முன்னுரிமை எனது குழந்தைகளை வளர்ப்பதே" என்று பாலியல் தொழிலாளி ஒருவர் தெரிவித்தார். அவர் தன்னையும் தனது பெயர் விவரங்களையும் வெளிப்படுத்த விரும்பவில்லை.

### ஏழ்மையே காரணம்

பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களில் பெரும்பாலானவர்கள் 26 முதல் 50 வயதுக் குட்பட்டவர்கள் என்று பாலியல் தொழிலாளர்கள் மற்றும் தெற்காசிய நட்பு (ஸ்வாசா - SWASA) என்ற வலையமைப்பு தனது ஆய்வு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. பொதுவாக நகர்ப்புறங்களைச் சேர்ந்த ஏழைகள், கூலித் தொழிலாளிகள், போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது கிராமப்புற விவசாய சமூகத்திலிருந்து வந்தவர்களே பாலியல் தொழிலில் ஈடுபடுகிறார்கள் என்று அந்த அறிக்கை மேலும் கூறுகின்றது.

இலங்கையில் பாலியல் தொழில் பரவலாக நடந்து வந்தாலும், 1841ஆம் ஆண்டு 4ஆம் இலக்க அலைந்து திரிபவர்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பாலியல் தொழிலாளர்கள் அடிக்கடி கைது செய்யப்படுகிறார்கள். பொது வீதியிலோ அல்லது நெடுஞ்சாலையிலோ அல்லது எந்த இடத்திலுமோ திரியும் எந்தவொரு பாலியல் தொழிலாளியையுமோ ஆணை இன்றிக் கைது செய்ய பொலிஸாருக்கு பழமையான இந்தச் சட்டம் அனுமதி வழங்குகின்றது. இலங்கையில் பாலியல் தொழிலில் ஈடுபடுவது குற்றமாகும்.

போரின் போதும் அதற்குப் பின்னரும் பணிபுரிந்த பாலியல் தொழிலாளிகள் வரலாற்றின் பக்கங்களில் இருந்து எவ்வாறு இல்லாமல் போகிறார்கள் என்பதை இந்த ஆய்வு அடையாளம் காட்டுகிறது. அவர்களின் அனுபவங்கள் சமூக இழிவுகள், தார்மீக அறிவுரைகள் மற்றும் வேண்டுமென்றே அவர்களைப் பற்றிப் பேசாமல் மௌனம் காப்பது என்று அனைத்தும் மறைக்கப்படுகின்றன. இந்தக் குறிப்பிட்ட பெண்கள் குழுவிற்கு இழப்பீடு, அங்கீகாரம், பொறுப்புக்கூறல், நீதி மற்றும் இடைக்கால நீதி என்று எதுவும் கிடைப்பதில்லை. இதனால் போரில் இருந்து தப்பியவர்களுக்கு வழங்கப்படும் பிற பொருளாதார வாய்ப்புகளை இவர்கள் அணுகுவது கடினமாகிறது. இந்த ஆய்வில் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட பெண்கள், அதிக கண்காணிப்புக்களும் தீவிர எதிர்ப்பும் நிறைந்த பின்னணியில் தங்கள் தொழிலில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு தாங்கள் எவ்வாறு தாழ்ந்த நிலையில் இருக்க வேண்டும் என்பதைக் விளக்கினர்.

ஆய்வில் காட்டப்பட்ட பல பெண்கள் வறுமை, போர், இடப்பெயர்வு, குடும்பத்தின் உழைப்பாளியின் இழப்பு அல்லது எவரது ஆதரவும் இல்லாதிருப்பது, குழந்தைகள் மற்றும் குடும்பத்தினருக்கு உணவூட்டவேண்டியிருப்பது ஆகிய காரணங்களால் பாலியல் தொழிலுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

### வலி தரும் கதைகள்

புத்தளத்தைச் சேர்ந்த அறுபது வயதுத் தாயான மஞ்சுளா, கடந்த காலத்தின் கொடூரங்களை நினைவு கூர்ந்தார். அவள் ஓர் இடம்பெயர்ந்த மீனவக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவள் 19 அல்லது 20 வயதில் மீனவருடன் ஓடிவிட்டாள். நான் அவருடன் வாழ்ந்தேன். ஆனால் ஒரு நாள் அவர் தனது ஆடைகளை எடுத்துக்கொண்டு வேலைக்குச் செல்வதாகக் கூறிச் சென்றார். பின்னர் திரும்பி வரவே இல்லை. நான் பாலியல் தொழிலுக்குள் தள்ளப்பட்டேன். எனது வாடிக்கையாளர்கள் பெரும்பாலும் படையினர் மற்றும் பொலிஸார்தான். அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்ததால் சீருடைகளைக் கண்டு நாங்கள் பயந்தோம். இறுதியில் நான் கர்ப்பமாகிவிட்டேன், பின்னர் என் குழந்தையின் தந்தை சட்டப்பூர்வமாக வேறொரு திருமணம் செய்துகொண்டு குடும்பமாகிவிட்டார் அறிந்தேன். நான் ஏதோ ஒரு வேலை செய்கிறேன் என்று என் பெற்றோர் நினைத்தார்கள், ஆனால் நான் என் குழந்தையைப் பற்றிக் கவலைப்பட்டேன். நான் ஒரு கடையில் வேலை செய்தேன், ஆனால் அங்கு நான் சம்பாதித்தது தினசரி ரூ. 400 முதல் -700 மட்டுமே. ஆனால் பாலியல் தொழில் மூலம் நான் சுமார் தினசரி ரூ. 4000 -முதல் -6000 வரை உழைத்தேன். (5ஆம் பக்கம் பார்க்க..)

# போரின் போதான பாலியல் தொழில் .....

அதனால் பாலியல் தொழிலாளியாகவே தொடர நினைத்தேன். போன்ற பெண்களின் கதைகள், இந்தச் சமூகம் பெண்களுக்கு எனக் கண்டிப்பாக வரையறுத்த சமூகப் பாத்திரங்களில் இருந்து வெளியேறுவதற்கான வாய்ப்பை போர் எப்படி எவ்வாறு வழங்கியது என்பதை விவரிக்கிறது, மேலும் அவர்களுக்கு அதிக லாபகரமான வாழ்வாதாரங்களைக் கண்டறியும் வாய்ப்பையும் அது அளித்தது. இந்த பெண்கள் பாலியல் தொழிலாளிகளாக தாம் மாறியதைத் தைரியமான செயலாகவே கருதுகின்றனர்.

இந்த ஆராய்ச்சிக்காக, பாலியல் தொழிலாளர்களின் பிராந்திய சங்கங்கள் மூலமாகவே பல பெண்கள் அடையாளம் காணப்பட்டனர். தனிப்பட்ட தொடர்புகள் மூலமாகவும் அடையாளம் காணப்பட்டனர். அவர்கள் தங்கள் கதைகளைப் பகிர்ந்து கொண்டனர், ஏனெனில் இந்தக் கதைகள் சமூகம் தம்மை ஏற்றுக்கொள்ளவும் சட்டத்தின் முன் சமத்துவத்தை நோக்கிய தங்களின் பயணத்திற்கு உதவும் என்றும் அவர்கள் கருதினர். இரண்டு வருட கால ஆய்வானது, அவர்கள் அனுபவித்த மீறல்கள் பற்றிப் பேசுவதற்கு இந்தப் பெண்களுக்கு எப்படி வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பதை அடிக்கோடிட்டுக் காட்டியது. பெண்களும் இது அவர்களின் வேலையின் ஒரு பகுதி நினைக்கிறார்கள். மேலும் அவர்களின் வாழ்க்கையில் எவ்வளவு வன்முறை ஊடுருவியுள்ளது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்கிறார் ஹெட்டியாராச்சி. பாலியல் வேலை பெரும்பாலும் குற்றவியல் மனநிலையின் மூலம் பார்க்கப்படுவதால் அவர்கள் நீதியின் பார்வையில் படுவ தில்லை. எனவே பாலியல் தொழில் செய்யும் பெண்கள் தாங்கள் இந்த வகையான மீறலுக்கு ஓரளவுத் தகுதியானவர்களே என்று நினைக்கிறார்கள். மேலும் அவர்களுக்கு இது சவாலைவிட சகித்துக்கொள்ள வேண்டிய ஒன்றாகவும் இருக்கின்றது" என்று அவர் கூறினார்.

### பழைய பயனில்லை

இந்த ஆராய்ச்சி கடந்த கால கதைகளை எடுத்துக்காட்டுகிறது என்றாலும், இந்த பெண்களுக்கு இன்னும் நீதி கிடைக்காததாலும், பாலியல் தொழிலுக்கு சட்டம் பயன்படுத்தப்படும் விதத்தாலும் அது நிகழ்காலத்துடன் இணைகிறது. இந்த திட்டத்திற்காக நேர்காணல் செய்யப்பட்ட பெரும்பாலான பெண்கள் இன்னும் பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். எனவே இது அவர்களின் கடந்த காலம் அல்ல. அவர்களின் குரல் களை விரிவுபடுத்துவதற்கான ஒரு தளம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது, ஒருவரையொருவர் விளக்குவதற்கும் சகோதரத்துவ சூழலை உருவாக்குவதற்கும் ஒரு வழி" என்று ஹெட்டியாராச்சி மேலும் கூறினார். பாலியல் தொழில் தொடர்பாக இலங்கையில் உள்ள பழைய சட்டங்களை நீக்குவதே பாலியல் தொழிலாளர்கள் மற்றும் தெற்காசிய நட்பு அமைப்பின் நோக்கம். அவர்கள் அதற்காகவே பாடுபடுகிறார்கள். அலைந்து திரிபவர்கள் சட்டம் என்பது வெள்ளையர்களிடமிருந்து மக்களை விலக்கி வைப்பதற்காக வேட்டையாடுபவர்கள் இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட சட்டமாகும், இது இப்போது பாலியல் தொழிலாளர்களைத் தண்டிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

பாலியல் தொழிலாளர்களைத் தண்டிக்க வேண்டிய அவசியமில்லை, அவர்கள் குழந்தைகளுக்கு உணவளிக் கவே இதையெல்லாம் செய்கிறார்கள் என்று தி கிராஸ்ரூட்டட் டிரஸ்ட் அமைப்பைச் சேர்ந்தவரான பாபா தேசப்பிரிய கூறுகின் றார். சில சமயங்களில் பிள்ளைகள் தமது தாயின் கடந்த காலம் குறித்து அறிந்தால் அவர்கள் தங்கள் தாய்மாரைத் துரத்திவிடுகிறார்கள். அவர்களுக்கு இருந்த ஒரே சாத்தியமான பொருளாதாரத் தெரிவு அதுதான் என்பதைப் பிள்ளைகளேகூட புரிந்துகொள்வதில்லை. இத்தகைய நிலையில் அந்த மக் களைத் தண்டிக்க வேண்டிய தேவை இல்லை, ஆனால் அவர்களின் பொருளாதாரப் பாதையைப் பாதுகாப்பானதாக்க ஒருவேளை அவர்கள் அதிலிருந்து வெளியேற விரும்பினால், அவர்களைக் குற்றஞ்சாட்டுவதற்குப் பதிலாக அதிலிருந்து வெளியேறுவதற்கான வழிகளை அவர்களுக்கு வழங்கு- வதும் அவசியம்" என்கிறார் தேசப்பிரிய.

2020ஆம் ஆண்டில் ஒரு விபச்சார விடுதியில் சோதனை நடத்தப்பட்டு ஏழு பாலியல் தொழிலாளர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது, அவர்கள் வாழ்க்கைக்காக பாலியல் தொழிலில் ஈடுபட்டால் அது குற்றமாகாது என்று நீதிபதி தீர்ப்பளித்தார். எனவே பாலியல் தொழிலை குற்றமற்ற தாக்குவதே எங்களின் ஒட்டுமொத்த கோரிக்கையாகும், ஆனால் அந்தச் சட்டம் நீக்கப்படும் இந்தக் கோரிக்கை ஒரு நாளும் நிறைவேறாது என்று தேசப்பிரிய கூறினார்.

பாலியல் தொழிலாளிகள் இப்போது அவர்களை 'வேக்ரண்ட்ஸ்' சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டாம் என்று அதிகாரிகளிடம் கோருகின்றனர். அதேபோன்று அந்தச் சட்டத்தின் கீழ் தங்களைக் குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கவேண்டாம் என்றும் வாதிடுகிறார்கள். ஆய்வின்படி பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சட்டத்தரணிகளாலும் பொலிஸாராலும் பாலியல் தொழிலாளர்கள் தாங்கள் குற்றம் செய்தார்கள் என்று நீதிமன்றத்தில் ஒப்புக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றார்கள் என்று தெரியவந்திருக்கின்றது. 300க்கும் மேற்பட்ட நாங்கள் நேர்காணல் செய்ததில் 50% க் கும் அதிகமான பெண்கள் தங்கள் வழக்கறிஞர்கள் அல்லது சட்டப் பிரிவு அதிகாரிகளால் குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி கேட்கப்பட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்" என்கிறார் தேசப்பிரிய. பாலியல் தொழிலையும் ஒரு வேலையாக பொலிஸார் ஏற்றுக்கொள்ளவேண்டும், பாலியல் தொழிலாளர் களை அவர்கள் அடிக்காமலும் இருக்க வேண்டும் என்றும் தேசப்பிரிய வலியுறுத்துகின்றார்.

### மாற்றம் வேண்டும்

பாலியல் தொழிலாளர்கள் சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனர், சில சமயங்களில் அவர்கள் தங்க ளுக்கான அடையாள அட்டையைகூடப் தயங்குகிறார்கள். அவர்களில் 70% பேர் இந்த ஆவணங்களைப் பெற விண்ணப் பிக்கவில்லை என்று அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இந்த வியங்களைப் பற்றி விசாரிக்க அவர்கள் கிராம நிர்வாக அதிகாரியிடம் செல்வதில்லை. இந்த ஆவணங்களுக்கு விண்ணப்பித்த பெண்களில் ஒரு சிறிய சதவீதத்தினர், அவற்றைப் பெறுவதற்காக தங்களிடம் பாலியல் சலுகைகள் கேட்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். சட்டபூர்வமான கணவன் இல்லாத காரணத்தால் அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கான பிறப்புச் சான்றிதழ்களையும்கூடப் பெறுவதில்லை. தங்களுக்கு கணவர் இல்லை என்று சொன்னவுடன், என்ன தொழில் செய்கிறார்கள் என்பதை வெளிப்படுத்த வேண்டியிருக்கும், அதன் பிறகு, அவர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப முடியாது. பாலியல் தொழிலைச் சுற்றியுள்ள களங்கம் காரணமாக இது வன்முறையின் சுழற்சி தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. இதன் விளைவாக அவர்களின் உரிமைகள் முற்றாக மீறப்படுகின்றன என்று தேசப்பிரிய கூறினார்.

அதுமட்டுமல்ல பாலியல் தொழிலாளர்களின் பணியிடங் கள் பெரும்பாலும் பாதுகாப்பானவையாக இல்லை. அவர்கள் பலாத்காரம் செய்யப்படுகிறார்கள். கொல்லப்படுகின்றார்கள். துன்புறுத்தப்படுகின்றார்கள்.

பாலியல் தொழிலாளிகள் தங்கள் தொழிலை விரும்பு கிறார்களா என்று கேட்டதற்கு தேசப்பிரியா, அவர்களைப் பொறுத்தவரை, இது மட்டுமே லாபகரமான மற்றும் சாத்தி யமான வருமானம். பாலியல் தொழிலாளிகளுக்கு மாற்று வேலைகளை வழங்க பல்வேறு திட்டங்கள் செய்யப்பட்டுள்ளன, ஆனால் அவர்கள் மற்ற வேலைகளைச் செய்வதற்கான திறமை அவர்களிடம் இல்லாமல் இருக்கலாம்" என்று தேசப்பிரிய கூறினார்.

நீங்கள் பாலியல் தொழிலில் ஈடுபட சம்மதித்தால், உங்கள் சம்மதம் மீறப்பட வேண்டும் என்று அர்த்தமில்லை. அவர்களின் ஆண்கள் ஊனமுற்றவர்களாக இருக்கலாம் அல்லது குழந்தைகளுடன் கைவிட்டவர்களாக இருக்கலாம். எனவே பாலியல் வேலை என்பது உழைப்பின் ஒரு வடிவம்; ஒரு வகையான வேலை," என்றார் தேசப்பிரியா.

இந்த விடயத்தில் மாற்றங்கள் வருவதற்கு அடிமட் டத்திலேயே பல மாறுதல்கள் செய்யப்படவேண்டும். இது விடயத்தில் சட்டத்தரணிகளுடன் நாம் அடுத்த கட்டமாகத் தொடர்ந்து பேசுவுள்ளோம் என்கிறார் தேசப்பிரிய.

அந்தக் கண்காட்சியில் இராணுவ டி-ர்ட் ஒன்றும் குழந்தையின் சிறிய ஆடை ஒன்றும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பொருட்கள் பாலியல் தொழிலாளி அனுபவித்த உணர்ச்சிகரமான வேதனையை இராணுவ உருமறைப்பு டி-ர்ட் என்பது ஒரு தாய் தன் மகனுக்கு அப்பா இருப்பதை நினைவுபடுத்த வைத்திருக்கும் நினைவுக் குறிப்பு. அவர் எனக்கு ஒரு குழந்தையைக் கொடுத்தார், ஆனால் என் மகனின் பிறப்புச் சான்றிதழில் அவரது பெயரைக் குறிப்பிடவில்லை, என்று அதன் கீழே எழுதப்பட்டிருக்கின்றது. அதே நேரத்தில் குழந்தையின் ஆடை மட்டுமே இறந்த குழந்தையைப் பெற்றெடுத்த ஒரு பாலியல் தொழிலாளியின் நேசத்துக்குரிய நினைவாக அங்கு உள்ளது.

[மூலம்: டெய்லிமிரர்]




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# அல் ஷவாஜ் மும்மொழிகளில் அழகுக் கலை நூல் வெளியீடு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருமணம், அழகுக் கலை விடயங்கள் அடங்கிய முதலாவது மும்மொழிகளிலும் மான 'அல்ஷ வாஜ் சஞ்சிகை வெள்ளவத்தையில் உள்ள கிறீண் பௌஸ் மண்டபத்தில் வெளியீட்டு வைக்கப்பட்டது.

நூலின் முதற்பிரதியை சஞ்சிகையின் பிரதம ஆசிரியைபாத்திமாசஸ்னாவிடமிருந்து பிரதமஅதிதியாக கலந்து கொண்ட டவர் ஹோல் நிறுவனத்தின் பணிப்பாளா சபை உறுப்பினா புரவலா ஹாசீம் உமர் பெற்றுக் கொண்டார்.

இந் நிகழ்வில் டெயிலி ஆங்கில பத்திரிகையாசிரியை ஹனா இப்ராஹிம், கொழும்புபல்கலைக்கழகசிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி பரினா ருசைக், வை.டப்ளியு எம்.எம். ஏ பெண்கள் அமைப்பின் தலைவி பவாஸா தாகா, அழகுக்கலை நிபுணரும் விரிவுரையாளருமான மபாசா பாருக் மற்றும் அழகுராணி போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற இமாசா டில்சானி பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

# கட்டுத் துப்பாக்கி வெடித்து பொலிஸ் அலுவலர் காயம்

தர்மபுரம் போலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கனை கோரமோட்டை பகுதியில் சட்டவிரோத கசிப்பு இடம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக அப்பகுதிக்கு விரைந்த தருமபுரம்பொலிஸார் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபரை கைது செய்ய முற்பட்ட வேலை சந்தேக நபர் அங்கிருந்து தப்பி ஒடிய பொழுது அவரை கைது செய்யும் நோக்கில் துரத்திச் சென்ற பொழுது மிருக வேட்டைக்காக வைக்கப்பட்டிருந்த கட்டுதுவக்கு வெடித்ததில் 37 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் தர்மபுர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேல் சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.



இந்தச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரனைகளை ஆரம்பித்துள்ளனர். (05 - 113)

# சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மகளிர் கிளைகள் புனரமைப்பு







(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிரதேசத்தில் 16 ஆம் வட்டாரத்தில் கல்முனை- 10,11,12 ஆம் கிராம சேவகர் பிரிவுகளுக்கான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மகளிர்கிளைகள் புணரமைப்புகூட்டம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயருமான றஹ்மத் மன்சூர் தலைமையில் நேற்றுமுன்தினம்(வியாழக்கிழமை) கல்முனையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், நாடாளு மன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சருமான எம்.எஸ்.உதுமா லெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், கல்முனை முன்னாள் மாநகர சபை உறுப்பினருமான ஏ.சி.சமால்டீன், அரசியல் அதிஉயர் பீட உறுப்பினரும், கல்முனை மாநகர சபை உறுப்பினருமான எம்.எஸ்.எம். நிஸார், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினரான ஏ.கே.கலில் றகுமான், கல்முனை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் ஏ. ஹனிபா மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

## இராணுவ ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தலைமைத்துவத்திற்கு முன்னுதாரணமாக செயற்பட்ட லெப்டினன் ஜெனரல் விக்கும்லியனகேவின் முயற்சியையும், அர்பணிப்பையும் பாராட்டி இராணுவ தளபதிக்கு எயார்போன் சின்னம் அணிவிக்கப்பட்டது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவினால் இந்த கௌரவிப்பு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டார்.

## ஆயுர்வேதக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் மூலம் நாம் செலவழிக்கும் அந்நியச் செலாவணியை சேமிக்க முடியும்.

ஒரு சில பகுதிகளில் அரசுக்குச் சொந்தமான பயிரிடப்படாத நிலங்கள் உள்ளன. அந்த நிலங்களில் மூலிகைப் பயிர்ச் செய்கைத் திட்டத்தைசெயல்படுத்ததேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிக சம்பளம் கேட்டு அரச ஊழியர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த மூலிகைச் செடிகளைப்பயிரிட்டால்சம்பளத்தை விடஅதிகமாகவருமானம்ஈட்டலாம். அரச ஊழியர்களும் இவற்றை வணிக ரீதியாக பயிரிட வாய்ப்பு உள்ளது.

கடந்தகாலங்களில்நட்டமடைந்து வந்த ஆயுர்வேதக் கூட்டுத்தாபனம் 2023 இல் 195 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளது. எனவே, நட்டமடைந்து அரசாங்கத்துக்குச் சுமையாகஇருந்தஒருநிறுவனத்தை இலாபம்ஈட்டும்நிறுவனமாக மாற்றி நாட்டுக்கே முன்னுதாரணமாகத் திகழ்ந்துள்ளோம்.

ஆயுர்வேதக்கூட்டுத்தாபனத்தில் உருவாக்கப்பட்ட புதிய நிர்வாகமே இந்த இலாபகரமான நிலையை உருவாக்கியுள்ளது என்பதைக் கூற வேண்டும். அத்துடன், எமது சுற்றுலாத்துறைக்கு அதிக வருமானத்தை வழங்கும் நோக்கில் பாரம்பரிய சுதேச மருத்துவ முறை மேம்படுத்தப்பட வேண்டும்.

சுதேச வைத்திய முறையை ஒருங்கிணைத்து நாட்டில் தற்போதுள்ள சுற்றுலா ஹோட்டல்களில்இருந்துஅதிகபட்சஇலாபத்தைப் பெற முடியும்.

நம் நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் குறைவான பணத்தை செலவிடுகின்றனர். சிலசமயங்களில் அவர்கள் தேர்ந்தெடுத்த இடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை சென்றபிறகு மீண்டும் இந்நாட்டுக்கு வருவதில்லை.

ஆனால் இங்கு ஆயுர்வேத சிகிச்சைக்காக வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சுதேச சிகிச்சை முறையை அறிமுகப்படுத்தினால், அவர்கள் சிகிச்சை பெற குறைந்தது ஆறு அல்லது ஏழு முறை இந்த நாட்டிற்கு வருகை தர வேண்டும். இதன்மூலம்இந்நாடுஅதிகஅளவில் அந்நியச் செலாவணியைப் பெற முடியும்.

ஒரு ஆரோக்கியமான பசுமை உணவு கலாசாரம் உள்நாட்டு மருத்துவமுறையில்உள்ளது. அந்த விடயங்களையும் நாம் இதனுடன் இணைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறாக சுதேச மருத்துவ முறையின் அடிப்படையில் எமது சுற்றுலாத் துறையை முன்னெடுத்துச் செல்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தைமேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைவழங்க முடியும்.

ஆயுர்வேதக்கூட்டுத்தாபனத்தில், முதல் தடவையாக, 'பொடிமந்திரா' என்றசிறப்புஆயுர்வேதமசாஜ்முறை அறிமுகப்படுத்தப்படுகிறது. வௌ;வேறு நாடுகளில் வௌ;வேறு வகையான மசாஜ் முறைகள் உள்ளன. ஆனால் எமது மசாஜ் முறையானது சுதேச ஆயுர்வேத முறை மூலம் பல்வேறு நோய்களை தடுக்கக்கூடியதாக இருப்பதே அதன் சிறப்பாகும். எனவே இவ்விடயத்திலும் நாம் கவனம்செலுத்தியுள்ளோம்என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# சரா பெனல் கிரிக்கெட் நடுவராகி திருகோணமலை சிஹான் சாதிப்பு



(அபு அலா)

இலங்கை கிரிக்கெட் நடுவர் குழாம் தரம் 4 இல் இருந்து தரம் 3 இற்கான தரமுயர்வு போட்டி தேர்வு கடந்த வருடம் பெப்ரவரி மாதம்முதல்ஒக்ரோபர்மாதம்வரை கொழும்பு நாலந்தா கல்லூரி மற்றும் கெத்தாராம ஆர் பிரேமதாஸ கிரிக்கெட் மைதானம் போன்ற இடங்களில் இடம்பெற்றது.

இதில்இலங்கைகிரிக்கெட்சபை, தேசிய ரீதியாக 25 நடுவர்களை மாத்திரமே அங்கீகரித்திருந்தது. அதற்கமைவாக திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினூடாக மேற்படிதரமுயர்வில் பங்குபற்றிய சிஹான் சுஹூட் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ரீதியில் முதல் இடத்தினையும், தேசிய ரீதியில் நான்காவது இடத்தினையும் தக்கவைத்ததன் மூலம் திருகோணமலை மாவட்ட கிரிக்கெட்டிற்கு பெருமை சேர்த்தது மட்டுமல்லாது திருகோணமலை மாவட்டகிரிக்கெட்வரலாற்றில்முதலாவது பெனல் நடுவர் என்ற வரலாற்று ரீதியான சாதனையை படைத்துள்ளார்.

தற்போது இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிகெட் சபையின் தரம் 2 நடுவராக கடமையாற்றும் சிஹான் சுஹூட் இங்கிலாந்தின் சஸ்ஸெக்ஸ் பிராந்திய லீக்கின் முதல்தர நடுவருமாவார். மூதூர் மத்திய கல்லூரி, திருகோணமலை இ.கி.ச இந்துக்கல்லூரி மற்றும்மாவனல்லசாஹிறாகல்லூரிகளின் பழைய மாணவரான சிஹான் சுஹூட், மூதூர்வெஸ்டன்வோறியஸ்அணியின் தலைவரும்,திருகோணமலைநடுவர்கள் சங்கத்தின் சிரேஸ்ட உறுப்பினரும், யூ.டி.பி.எம் அமைப்பின் நடுவரும் பயிற்றுவிப்பாளரும் ஆவார்.

இத்தெரிவிற்காக இலங்கை கிரிக்கெட் தரம் 4 இல் அங்கம் வகிக்கும் 162 நடுவர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (05)

### மோ. சைக்கிள் விபத்தில்

# காயமடைந்திருந்த இளைஞன் இறப்பு

அதிவேகமாகமோட்டார்சைக்கிளில் விபத்துக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த இளைஞன் புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி – ஊற்றுப்புலம் பகுதியைச் சேர்ந்த பொ.அபிசாகன் (வயது 20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த இளைஞன் கடந்த 26 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது மோட்டார்சைக்கிள்வேகக்கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதியது. இதன்போது அவர் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை.

இந்நிலையில் அவர் மீட்கப்பட்டு கிளிநொச்சி சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலைக்குகொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம்பிறேம்குமார்மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (05)

# ஹிக்கடுவ விடுதியில் ஆணின் சடலம் மீட்பு

ஹிக்கடுவ, வேவல பகுதியில் உள்ள விடுதியொன்றின் அறையில் இரத்தக் காயங்களுடன் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் வறகொட, களனி பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடையவர் எனக் கூறப்படுகிறது.

குறித்த நபரிடமிருந்து எந்தவொரு தகவலும் கிடைக்காத காரணத்தினால் விடுதி நிர்வாகத்தினர் புதன்கிழமை மாலை ஹிக்கடுவ பொலிஸாருக்கு அறிவித்துள்ளதையடுத்து, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதையடுத்து, அந்த நபர் தங்கியிருந்த விடுதி அறையின் ஜன்னலை பொலிஸார் மற்றும் விடுதி ஊழியர்கள் திறந்து பார்த்தபோது, அவர் இரத்த காயங்களுடன் உயிரிழந்திருந்தமை தெரியவந்தது.

தற்போது சடலம் பொலிஸாரின் வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹிக்கடுவ பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)





# அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசலுக்கு புதிய தலைவர் தெரிவு

(கே எ ஹமீட்)

அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசல் தலைவராக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எல்.எம். ஹனீஸ் வியாழக்கிழமை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

12 குடிகளின் பிரதிநிதிகளிலிருந்து தலைவர் பதவிக்காக ஹனீஸ் - ஏகமனதாகத் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னரும் அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசலின் தலைவராக 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை, ஹனீஸ் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரின் தந்தை மர்ஹூம் அஹமட் லெப்பையும் அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசலின் தலைவராக 23 வருடங்கள் பணியாற்றியுள்ளார். 2006 ஆம் ஆண்டு அவர் மரணிக்கும் போதும் - பெரிய பள்ளிவாசலின் தலைவராக இருந்தார்.

இதேவேளை, பெரிய பள்ளிவாசலின் புதிய கட்டட நிர்மாணத்துக்காக 100 தலா ஒரு லட்சம் ரூபா நிதியை அறவிடும் திட்டத்தை இதன்போது ஆரம்பித்து வைத்த புதிய தலைவர் ஹனீஸ், அதற்கு தனது பங்களிப்பாக ஒரு லட்சம் ரூபாவை முதன்முதலில் வழங்கி வைத்தார். (05)

# பொலிஸாரின் வாகனம் மீது புளியங்குளத்தில் தாக்குதல்

### ஒருவர் கைது

வவுனியா புளியங்குளம் பொலிஸ் நிலைய வாகனத்தின் மீது தாக்குதல் மேற்கொண்ட ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் ஒருவரை கைது செய்வதற்காக வாகனத்தில் பொலிஸார் சென்றுள்ளனர்.

போது குறித்த வாகனத்தின் மீது வீதியில் நின்ற நபர் ஒருவரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த நபரை புளியங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் மீது மேற்கொள்ளப்படும் மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்டவரை வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆயர்படுத்துவதற்குரிய நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (05-100)

# சுதந்திர தினத்தையொட்டி காரைதீவில் சிரமதானம்







(வி.ரி. சகாதேவராஜா)

இலங்கை குடியரசின் 76 ஆவது சுதந்திரதினத்தைமுன்னிட்டுகாரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) கடற்கரை பகுதியை சுத்தம் செய்தனர்.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் தலைமையிலான பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் 'பிளாஸ்டிக் அற்ற வெள்ளிக்கிழமை' என்கின்ற தொனியில் கடலோர சுத்தத்தை மேற்கொண்டனர்.

சிரமதானத்தில் பிரதேச சபை மற்றும் பொலிஸார் பங்கு பற்றினர்.

வேலைத்திட்டத்தை நேற்று காலை 7 மணி முதல் 12 மணி வரை மேற்கொண்டனர்.

இதனால் கடலோரத்தின் பெரிய பகுதிகள் பிளாஸ்டிக் அற்ற பிரதேசமாக துப்புரவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# நடைபாதை வியாபார நிலையங்கள் வவுனியா நகரசபையால் அகற்றம்



வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள நடைபாதை வியாபார நிலையங்கள் நகரசபையால் நேற்று (வெள்ளிக்கிழமை) அகற்றப்பட்டன.

வவுனியா பொது வைத்தியசாலை சந்தியில் இருந்து கொரவப்பொத்தான வீதி சந்தை உள்வட்ட வீதி ஆகியவை நடைபாதை வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் பாதசாரிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டுவருகின்றனர். இதனால் அடிக்கடி வாகன நெரிசல் ஏற்பட்டுவருவதுடன், விபத்துக்களை சந்திக்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

நடைபாதைகளை ஆக்கிரமித்து வியாபாரம் மேற்கொள்ளப்படுவதால்பாதசாரிகள் பிரதான வீதியால் நடந்து செல்லவேண்டிய அவலநிலைமை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் நகரசபை நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் தினந்தோறும் நடைபாதையை ஆக்கிரமிக்கும் வியாபார நிலையங்கள் அதிகரித்து செல்கின்றன.

இந்நிலையில்சந்தைசுற்றுவட்ட வீதிக்கு நேற்றையதினம் சென்ற வவுனியா உத்தியோகத்தர்கள் மற்றும் போக்குவரத்து பொலிஸார் நடைபாதை வியாபாரநிலையங்களை அகற்றியதுடன், அவர்களது பொருள்களையும் பறிமுதல் செய்தனர்.

இதேவேளை கொறவப் பொத்தான வீதியில் அமைந்துள்ள நடைபாதை விற்பனை நிலையங்களையும் அகற்றுவதற்கான நடவடிக்கையினை நகரசபை எடுக்வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (05-100)

காலைக்கதிர் Kalaikkathir

# ஜம்பு நிலக்கடலைச் செய்கையை ஊக்குவிக்க உபகரண உதவிகள்

## திருக்கோவிலில் வழங்கி வைப்பு





(வி.ரி.சகாதேவராஜா)

விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் ஜம்பு நிலக்கடலை பயிர்ச்செய்கை நடவடிக்கையை ஊக்குவிக்கும் பொருட்டு ஐரோப்பிய யூனியன் நிதிப்பங்களிப்புடன் செயற்படுத்தப்பட்டு வரும் வேலைத்திட்டத்தின் திருக்கோவிலில் தெரிவு செய்யப்பட்ட 88 பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம கலந்து கொண்டு தெரிவுசெய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ்.நிருபா, கிழக்கு மாகாண விவசாயதிணைக்களத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஞானச்செல்வம், கிழக்கு மாகாண விவசாய விவசாய விஞ்ஞானி ஏ.அருணந்தி, நிர்வாக உத்தியோகத்தர் ரி.மோகனராஜா, கிராம சேவைக்கு பொறுப்பான நிருவாக உத்தியோகத்தர் என்.கந்தசாமி, திட்டத்திற்கான கள உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பயனாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# இறைச்சிக் கடைகளை மூடுமாறு அறிவுறுத்தல்



(பாறுக் ஷிஹான்)

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 04 ஆம் திகதி ஞாயிறன்று கல்முனை மாநகர சபை ஆள்புல எல்லையினுள் விலங்கறுமனை மற்றும் இறைச்சிக் கடைகள் யாவும் பூட்டப்படும் என்று மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அறிவித்துள்ளார்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அறிவித்தலுக்கு அமைவாக அன்றைய தினம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கோழியிறைச்சி மற்றும்ஆட்டிறைச்சிவிற்பனைநிலையங்களையும் விலங்கறுமனைகளையும் திறக்காமல் மூடிவிடுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதம் மூலம் ஆணையாளர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(05)

# கல்விச்சாதனையாளர்கள் காரைதீவில் கௌரவிப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு ரக்ஸ் மற்றும் அஸ்கோ அமைப்பின் வருடாந்த கல்விச்சாதனையாளர் கௌரவிப்பு விழா இன்று (சனிக்கிழமை) காரைதீவில் நடைபெறவிருக்கிறது.

காரைதீவு விபுலானந்தா கலாசார மண்டபத்தில் இன்று (சனிக்கிழமை) காலை 09.30 மணியளவில் அமைப்பின் ஓய்வுநிலை பொறியியலாளர் அ.விவேகானந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்பபீட பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி தவநாயகம் மதிவேந்தன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க உள்ளார்.

கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் எஸ். புவனேந்திரன் உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து சிறப்பிக்க உள்ளார்கள்.

இங்கு மூன்று ஏ பெற்ற மாணவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாபரிசும்ஏனையமாணவர்களுக்கு ஏனைய பரிசுகளும் வழமைபோல் வழங்கி உள்ளனர். (05)

# சைவப் புலவர்களுக்கு இன்று பட்டமளிப்பு

(காரைதீவு நிருபர் சகா)

அகில இலங்கை சைவத் தமிழ் பண்டிதர் சபையின் நான்காவது வருட சைவப்புலவர் பட்டமளிப்பு விழா இன்று (சனிக்கிழமை) மட்டக்களப்பு தமிழ்ச் சங்க நடைபெற இருக்கின்றது..

அகில இலங்கை சைவத் தமிழ் பண்டிதர் சபையின் தலைவரும், கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதியுமான சைவப் புலவர் பேராசிரியர் கலாநிதி தில்லைநாதன் சதானந்தன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற இருக்கிறது.

நிகழ்வில்பிரதமஅதிதியாககிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசியர் மா. செல்வராஜா, சிறப்பு அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்எஸ்.குணபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

இம்முறை 19 இளம் சைவப் புலவர்களும் சைவ புலவரும் பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட இருக்கிறார்கள்.

2017 இல் அகில இலங்கை சைவத் தமிழ் பண்டிதர் சபை மண்டூரைச் சேர்ந்த சைவப்புலவர் கல்விப்பணிப்பாளர்தில்லைநாதனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் பரீட்சைகள் நடத்தி பண்டிதர்களுக்கு சைவ புலவர் பட்டங்கள், இளம் சைவப் புலவர்கள் பட்டங்கள் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# வவுனியா வைத்தியசாலையிலிருந்து சிறைக் கைதி ஒருவர் தப்பியோட்டம்

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிறைச்சாலை அதிகாரிகளின் இருந்த சந்தேகநபர் ஒருவர் தப்பியோடியுள்ள நிலையில் குறித்த கைதியை கைது செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கஞ்சா விற்பனை மற்றும் வைத்திருந்தமைதொடர்பில்கடந்த26.01.2024 அன்றுநெளுக்குளம்பொலிஸாரானால் கைது செய்யப்பட்ட 28 வயதுடைய இளைஞன் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆயர்படுத்தப்பட்ட பின்னர் வவுனியா சிறைச்சாலையில் தடுப்புக்காவலில்வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் 29.01.2024 அன்று சிறைச்சாலையில் சந்தேகநபரான 28 வயதுடைய இளைஞருக்கு ஏற்பட்ட சுகவீனம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிறைச்சாலை அதிகாரிகளின் காவலில் அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது.

இந்நிலையிலேயே 31.01.2024 அன்று காலை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையிலிருந்து தப்பியோடியுள்ளார்.

தப்பியோடிய குறித்த சந்தேக நபரை கைது செய்வதற்குரிய நடவடிக்கையினை வவுனியா பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.(05-100)

## பொருளாதாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சுகள்உள்ளிட்டபல்வேறு அமைப்புகளின் ஒத்துழைப்புடன் இந்த வேலைத்திட்டத்தை மேலும் வலுவாக முன்னெடுக்க கிடைத்துள்ளமை மகிழ்ச்சிகுரியது. கொவிட் - 19 தொற்று பரவலுடன் நாட்டின் பொருளாதாரம் முன்னொருபோதும் இல்லாவகையில் சரிவை கண்டது. அதனால் இலங்கையின் வறுமை நிலையும் குறிப்பிடத்தக்க அளவில் உயர்வடைந்தது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமான நிலைக்குத் திரும்பியுள்ளதுடன் மக்களின் வறுமையை ஒழிப்பதில் விசேட கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

நமது நாட்டில் வறுமையை போக்கவும், மக்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தவும் பல்வேறு திட்டங்கள் அவ்வப்போது செயல்படுத்தப்பட்டுவந்தன. சமுர்த்தி வேலைத்திட்டம்பிரதான இடத்தைப் பெற்றதுடன், தற்போதைய ஆளும் தரப்பால்தொடங்கப்பட்டஅஸ்வெசும திட்டத்தின் ஊடாக அது மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

அஸ்வெசும திட்டம் அரசியல் சாராமல், தரவு அடிப்படையில் வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தரவு அடிப்படையிலான ஆய்வுகள் மற்றும் கணக்கீடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இறுதிப் பட்டியலின்படி, மக்கள் மேல்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்க வாய்யப்பளிக்கப்பட்டுள்ளது. பயனாளிகளுக்கான நிதி நேரடியாக பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படும். இந்த நாட்டில் வறுமையை ஒழிப்பதில் அஸ்வெசும வலுவான பங்களிப்பை வழங்கும்என்றுநம்புகிறோம்.

ஒரு நாடாக நாம் நிலையான பொருளாதார வளர்ச்சியை உருவாக்க வேண்டும். அந்தநோக்கத்தில் சுற்றுலா, விவசாயம் மற்றும் உற்பத்தித் துறைகளில் அதிக வளர்ச்சியை எட்டுவதற்கு அரசாங்கம் திட்டமிட்ட வகையில் செயல்பட்டு வருகிறது. இலங்கைக்கு அதிக சுற்றுலாப்பயணிகளை ஈர்ப்பது, விவசாயத்தை நவீனமயமாக்குவதுமற்றும்இலங்கையை உற்பத்தி மையமாக கட்டியெழுப்புவது குறித்து கவனம் செலுத்தப்படுகிறது.

சவால்களுக்கு மத்தியிலும் இலங்கை இன்று பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைந்து வருகிறது. வாழ்க்கைச் செலவில்கணிசமான அதிகரிப்பு உள்ளிட்ட சவால்களை எதிர்கொள்ளும் போதும், நாட்டிற்கான புதிய வருமான வழிகளை உருவாக்குவதற்கும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் ஆளும் தரப்பு மும்முரமாக செயல்பட்டு வருகிறது. நாட்டிற்குவருமானம்ஈட்டுவதில்சுற்றுலாத் துறை முன்னணியில் உள்ளது,

மேலும் நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவது மட்டுமல்லாமல், சுற்றுலாப் பயணிகளின் வசதிகளின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் நாள்தோறும் அதிக பணத்தை செலவிடும் உயர்தரசுற்றுலாப்பயணிகளைஅழைத்து வர அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கடந்த காலத்தில் பின்பற்றப்பட்ட உரக் கொள்கையினால் பாதிக்கப்பட்ட விவசாயத் துறையை நவீனமயப்படுத்த விரிவான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில்கையெழுத்திடுவதுஉள்ளிட்ட வர்த்தக ஒப்பந்தங்களில் மூலோபாய கூட்டாண்மைகள் மற்றும் திருத்தங்கள் மூலம் உற்பத்திகளை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

புதுப்பிக்கத்தக்க வலு சக்திக்காக இலங்கைக்கு சொந்தமான சுமார் 18,000 மெகாவொட்சக்தியுடன், பொருளாதாரத்தில் தனித்துவமான இடத்தை இத்துறை பெறும். பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டங்களைதொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கும் அதிகளவான முதலீட்டாளர்களை இலங்கைக்குள் ஈர்ப்பதற்கும் நாம் செயற்பட்டு வருகின்றோம். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதன் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுடன் அரசியல் சவால்களுக்குதீர்வு காண்பதற்கும் ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய ஆளும் தரப்பு அர்ப்பணிப்புடன்செயற்படுகின்றது என்றார்.

## நிகழ்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதி வேற்றம் செய்துள்ளது.

நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலை காப்புச் சட்டத்தினால் கருத்துமற்றும்பேச்சுசுதந்திரத்துக்கு தடையேற்படும். இந்தச் சட்டத்தின் ஊடாக சிவில் சமூகம், கைத்தொழிற்றுறை உள்ளிட்ட பல துறைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களை மீள்பரிசீலனை செய்து சட்டத்தை திருத்தம் செய்ய இலங்கை ஆளும் தரப்பிடம் வலியுறுத்துகின்றோம் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தெரிவித்துள்ளது.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!